**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**கலை கலாசார பீடம்**

**இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு**

**2014/2015 (December 2019)**

**GYS 2213 பொருளாதாரப் புவியியல் (Economic Geography)**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

1. அ) பொருளாதாரப் புவியியல் என்பதால் கருதப்படுவது யாது? (03 புள்ளிகள்)

   ஆ) "உலகில் காணப்படும் எந்தவொரு பொருளாதார நடவடிக்கையும் புவியியல் பரிமாணத்தை அடிப்படையாகக் கொண்டே வளர்ச்சி பெற்று வருகின்றது" இக்கூற்றினை ஏற்றுக்கொள்கின்றீரா? ஆராய்க. (17 புள்ளிகள்)

2. அ) வளம் என்ற பதத்தினை வரையறை செய்து அவற்றினை வகைப்படுத்திக் காட்டுக. (04 புள்ளிகள்)

   ஆ) புதுப்பிக்கமுடியாத வளங்கள் மூன்றினை குறிப்பிட்டு அவற்றின் பொருளாதார முக்கியத்துவத்தினை சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

   இ) வளங்களை வினைத்திறனுடன் கையாள்வதில் உலக நாடுகள் எதிர்நோக்கிவரும் சவால்களை உதாரணங்களுடன் ஆராய்க. (10 புள்ளிகள்)

3. அ) கலப்புப் பொருளாதார முறைமையின் நன்மை தீமைகளை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

   ஆ) சந்தைப் பொருளாதாரத்திற்கும் பொதுவுடமைப் பொருளாதாரத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை மதிப்பீடு செய்க? (14 புள்ளிகள்)

## பகுதி II

4. "அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதாரத்தில் புதிய கைத்தொழில் மயமா நாடுகளின் வளர்ச்சி முக்கிய பங்காற்றுகின்றது." இக்கூற்றிற்கான பொருத்தப்பாட்டி ஆராய்க. (20 புள்ளிகள்)

5. "விவசாயப் பொருளாதார அபிவிருத்தியில் நவீன தொழில்நுட்பங்களின் பங்களிப்பு" எ தலைப்பில் கட்டுரை வரைக. (20 புள்ளிகள்)

6. உலக பொருளாதார விருத்தியில் போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் துறையின் பங்க தொடர்பாக ஆராய்க. (20 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் யாதாயினும் **இரண்டினிற்கு** விளக்கக் குறிப்புரை எழுதுக.

   அ) உலகின் பழைமையான பொருளாதார முறைமைகள்

   ஆ இலங்கையின் அண்மைக்கால பொருளாதார நிலமைகளில் சுற்றுலாத்துறை ஏற்படுத் தாக்கங்கள்

   இ) நான்காம் நிலைப் பொருளாதார நடவடிக்கையில் (Quaternary Economic activities) நவீனத்துவ மாற்றங்கள்

(2 x 10 = 20 புள்ளிக